## தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை – 2015

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, ஒன்றிணைந்த காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் தர மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 56(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய வாடகை ரூபா 180,000 தொகை கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) வருடாந்த குத்தகை வாடகை ரூபா 99,000 மற்றும் காணி ஒன்றினை குத்தகைக்கு எடுத்த ஆரம்ப வைப்பு ரூபா 297,000 இனை காணிகளின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது.

#### 2.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

3 பிரதேச அலுவலகங்களின் பேணப்பட்டிருந்த 3 வங்கிக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள காசு மீதியை விட காசேட்டின் மீதி ரூபா 334,712 இனால் அதிகரித்திருந்ததுடன் மேலும் ஒரு கணக்கின் மீதி காசேட்டு மீதியை விட ரூபா 346,586 இனால் குறைந்துள்ளது.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 56,146,515 இற்கான கடன்பட்டோர் மீதியில் 05 வருடங்களை மிகைத்த ரூபா 3,088,709 இற்கான 35 கடன்பட்டோர் மீதிகளும், 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்டதாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,088,351 இற்கான 03 கடன்பட்டோர் மீதிகளுக்கும், 01 முதல் 03 வருடங்களுக்கு இடைப்பட்டதாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 51,969,455 தொகையான 34 மீதிகளும் காணப்பட்டன.

(i) 1995 ஆண்டு முதல் 2014 வரையான காலப் பகுதியில் அதிகார சபையினால் கொள்வனவு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 571,196 தொகையான முற்பணங்கள் மற்றும் அதிகாரசபையின் தேசிய நிலையம் ஒன்றிற்கு 2012 ஆண்டின் போது வழங்கியிருந்த ரூபா 763,476 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஊழியர் கடன் மீதியில் நீண்ட காலமாக காணப்படும் சேவையை விட்டுச் சென்றுள்ள ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 104,328 தொகையான கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 05 வருடங்களை விஞ்சிய ரூபா 252,895 தொகையான 9 கடன்கொடுத்தோர் மீதிகளும், 03 வருடங்களுக்கும் 05 இற்கு இடைப்பட்ட ரூபா 117,525 தொகையான 02 கடன்கொடுத்தோர் மீதிகளும் 01 வருடம் முதல் 03 வரையான ரூபா 12,766,539 தொகையான 45 கடன்கொடுத்தோர் மீதிகளும் மீளாய்வாண்டு இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நானாவித கடன்பட்டோர் மீதியில் ரூபா 14,270,952 தொகை தலைமை அலுவலகம் மற்றும் 03 தேசிய நிலையங்கள் மற்றும் மாவட்ட மத்திய நிலையங்கள் இடையே ஏற்பட்டிருந்த உள்ளகக் கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்பட்ட மீதிகளாகும். அத் திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதிகள் ரூபா 13,136,958 ஆகக் காணப்பட்டதுடன் அதில் அடங்கியுள்ள மேற்படி கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்பட்ட மீதிகள் ரூபா 8,256,064 தொகை ஆகும். இந்த உள்ளகக் கொடுக்கல் வாங்கல்களில் மீதான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் இடையே 05 வருடங்களை மிகைத்திருந்த போதிலும் தீர்க்கப்படாதிருந்த ரூபா 815,596 தொகையான 14 மீதிகள் காணப்பட்டன.

(ii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்களின் மீதி ரூபா 43,942,849 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 27,448,816 தொகை, மூன்று தேசிய பயிற்சி நிலையங்களின் பயிலுனர்களிடம் அறவிடப்பட்டிருந்த ரூபா 5,000 வீதமான திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்களினைக் கொண்டதாகும். அவற்றில் பயிற்சி முடிவடைந்து நிறுவனத்தில் இருந்து விலகிச் சென்றுள்ள பயிலுனர்களினால் திருப்பி பெற்றுக்கொள்ளப்படாத அண்ணளவாக ரூபா 10,000,000 இற்கான தொகை ஒன்றும் தீர்க்கப்படாமல் காணப்பட்டது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு** | **இணக்கமின்மைகள்** |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| IX அத்தியாயத்தின் பிரிவு 2.2 | அரச அலுவலர்கள் அலுவலக நேரத்திற்கு புறம்பாக நடத்திய விரிவுரைகளின் மூலம் கிடைக்கும் படிகளிலிருந்து 10 சதவீதம் அரச பங்காக திரட்டு நிதிக்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது ரூபா 2,658,079 தொகையான அதிகாரச் சபையில் பகுதி நேர பாடநெறிகளின் விரிவுரை கட்டணம் மீது ரூபா 265,807 இற்கான அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 510,100 கூட்டுத்தொகையான 09 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. அத்துடன் 05 வருடங்களுக்கு முன்னர் வைப்புச் செய்திருந்த போதிலும் தேறப்படாத ரூபா 26,211 தொகையான 17 காசுக் கட்டளைகள் தொடர்பாகவும் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 702(3) | மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது கையொப்பமிடப்பட்டுள்ள ஒப்பந்த வேலை உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | கணக்குகளுடன் வருடாந்த அறிக்கையின் வரைபு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2006 இன் அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 1.2.1(இ) ஆம் பிரிவு | வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக மற்றும் பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரமின்றி 11000 மொடியுலர்கள் அச்சிடுவதற்காக ரூபா 1,972,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி அதிகாரச் சட்டத்தின் 53 ஆம் பிரிவு | தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி வழங்கும் நிதியம் எனும் பேரில் நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டு திறைசேரி மானியங்கள் உள்ளடங்கலாக அனைத்து வருமானங்களும் வரவு வைப்பதற்கு மற்றும் அனுமதிக்கப்பட்ட அனைத்து செலவுகளும் அதற்கு செலவு வைக்கப்பட்டு, மிகைப்பணம் திறைசேரியில் வைப்புச் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் மத்திய நிதியம் (Central Fund) எனும் பெயரில் நிதியம் ஒன்று நிறுவப்பட்டிருந்ததுடன் அவற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகள் அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடைபெற்றிருக்கவில்லை. அத்துடன் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதனது மீதி ரூபா 51,779,776 திறைசேரியில் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2006 திசெம்பர் 22 திகதிய இலக்கம் பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரமின்றி அதிகாரசபையில் 06 நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இந்த நிதியங்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 25,479,552 தொகை ஆகும். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 84,748,374 ஆன பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 19,566,476 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 65,181,898 ஆன வீழ்ச்சியொன்று ஏற்பட்டுள்ளது. திறைசேரி மானியம் ரூபா 35,000,000 இனால் அதிகரித்து, பயிற்சி செலவினம் ரூபா 77,760,934 இனால் குறைவடைந்த போதிலும் தனிநபர் வேதனங்கள் ரூபா 151,042,770 இனால் அதிகரித்தமை மேறபடி வீழ்ச்சிக்கு முக்கியமான காரணமாகியிருந்தது.

மீளாய்வாண்டில் மற்றும் கடந்த 4 வருடங்களில் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்ததுடன் 2014 ஆண்டின் போது ரூபா 19,566,476 ஆன பற்றாக்குறை மீளாய்வாண்டு அளவில் ரூபா 84,748,374 தொகை வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், ஊழிய ஊதியங்கள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு ஆகியன சீராக்கப்பட்ட பின்னர் 2011 ஆண்டின் போது ரூபா 278,586,424 தொகையான அதிகாரசபையின் பங்களிப்புத் தொகை மீளாய்வாண்டளவில் ரூபா 603,161,305 தொகை வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

**3.2 அதிகார சபைக்கு எதிராக அல்லது அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டச் சம்பவங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று ஊழியர்கள் தொடர்பாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கான கொடுப்பனவு செய்வதற்கு தவறுதல் மற்றும் சேவையைவிட்டு நீக்கியமை தொடர்பாக தொழில் திணைக்களத்தினால் அதிகாரசபைக்கு எதிராக 02 வழக்குகள் மற்றும் சேவையில் இருந்து நீக்குதல், பணிக்கொடை செலுத்தாமை மற்றும் ஊழியர் சேமலாப மிகைவிதிப்பு அறவீடு செய்தல் தொடர்பாக நான்கு அலுவலர்களினால் அதிகாரசபைக்கு எதிராக 03 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) அதிகாரசபைக்குச் சொந்தமான வெல்லவத்த பயிற்சி நிலையத்தின் காணியின் உரித்து தொடர்பாக அதிகாரசபையினால் வெளிசாரார் ஒருவருக்கு எதிராக வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1990 இன் 20 இலக்கம் கொண்ட மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 37(1) ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் அதிகார சபையின் குறிக்கோளாகிய தொழிற்பயிற்சிகளைத் திட்டமிடல் மற்றும் வழங்குதல், பயிற்சி தரங்களை நிர்ணயித்தல், பரீட்சைகள் நடத்துதல் தொழில் பயிற்சி பற்றிய ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்ளல், பயிற்சி வழங்கும் இயலுமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமமான குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்புடைய சான்றிதழ்கள், டிப்ளோமா மற்றும் பட்டம் சித்தியடைவதற்காக கவனம் செலுத்துவதற்காக உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளல் மற்றும் வலுப்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது அதிகாரசபையினால் தொழிற்பயிற்சி தொடர்பாக ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திகள் மேற்கொள்வதற்காக தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயல்நடடிவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிராத மற்றும் போதியளவில் நிறைவேற்றப்படாத விடயங்கள் பின்வருமாறு,

(i) செயல்நடடிவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 425 பயிலுனர்களுக்காக 40 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் திட்டமிடப்பட்டிருக்காத 21 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. அதற்காக 699 பயிலுனர்கள் பங்குபற்றியிருந்தனர்.

(ii) செயல்நடடிவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்காத கைவிடப்பட்ட பயிற்சிநெறிகளின் எண்ணிக்கை 66 ஆகும்.

(iii) மீளாய்வாண்டின் போது பயிற்சிகள் வழங்குவதற்காக 27,000 பயிலுனர்களை சேர்த்துக்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 22,616 பேர்கள் மாத்திரமே சேர்க்கப்பட்டிருந்தமையால் பயிலுனர் சேர்வு

குறைவடைவதற்கான காரணத்தை கண்டறிந்து அதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) வேறு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறும் 35,000 பேருக்கு வேலையுடனான பயிற்சி வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் வேலையுடனான பயிற்சிக்காக அனுப்பியிருந்த 10,040 அதாவது 29 சதவீதமாக குறைந்த அளவே ஆகும். மேலும் பயிற்சி பெறுவோர் ஈடுபடுத்துவதற்காக சந்தர்ப்பம் ஒன்று உள்ள நிறுவனங்களைத் தொடர்பினை ஏற்படுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் அதன் கீழ் எந்த செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(v) மீளாய்வாண்டின் போது 150 உத்தியோகத்தர்களுக்கு தொழில்சார் வழிகாட்டல் செயற்பாடுகளுக்காக பயிற்சி வழங்குதல் இலக்காக இருந்த போதிலும் அது தொடர்பாக அதிகாரசபையினால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) அதிகாரசபையின் பணிகளுக்காக 50 மதியுரையாளர்கள் மற்றும் 25 ஏனைய பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் அவ் ஆட்சேர்ப்பு ஏதும் இடம்பெற்றிருக்கவில்லை.

(vii) கைத்தொழில் உதவிச் சேவையினை அறிமுகப்படுத்துவதற்கான 5 உப செயற்பாடுகள் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(viii) முன் கற்றவை பின்னர் இனங்காணல் (RPL) முறைமை தொடர்பாக அறிவூட்டும் 30 நிகழ்ச்சித் திட்டங்கள் ரூபா 1.25 மில்லியன் செலவில் மேற்கொள்வது குறிக்கோளாக இருந்த போதிலும் 20 நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை.

(ix) விஷேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1000 பயிலுனர்களுக்கு பயிற்சி வழங்கத் திட்டமிட்டிருந்த போதிலும் 262 பயிலுனர்களுக்கு மாத்திரமே பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

(இ) தொழிற் திறன் துறைசார் அபிவிருத்தி செயற்திட்ட உதவியின் கீழ் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றல் பின்வருமாறு.

(i) 2015 ஆண்டிற்கான முன் கற்றல் பின்னர் இணங்காணல் (RPL) முறைமையின் மூலம் 5000 சான்றிதழ்கள் வழங்குவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 532 சான்றிதழ்கள் மாத்திரமே வினியோகிக்கப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டின் போது 3 தேசிய மத்திய நிலையங்களில் மற்றும் 25 மாவட்ட மத்திய நிலையங்களில் தர முகாமைத்துவ முறைமை (ISO Standrad) இனை அமைப்பதற்கு மற்றும் நடாத்திச் செல்வதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் 2 நிலையங்களில் மாத்திரம் அவ் விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

-----------------------------------------------

2014 ஜூன் 04 ஆம் திகதி ரூபா 4,974,144 தொகையொன்று செலவிடப்பட்டு தலைமை அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்தூக்கி 2015 செப்தம்பர் மாதத்தில் செயலிழந்திருந்தது. குறிப்பிட்ட தினத்தில் மின்தூக்கியை சேவை மேற்கொள்வதற்காக சேவை உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் அதனை சேவிஸ் பண்ணுவதற்காக ரூபா 92,877 தொகை ஒன்று செலுத்துவதற்கு அதிகார

சபைக்கு நேர்ந்திருந்தது. எவ்வாறாயினும் 2015 செப்தம்பர் 29 ஆந் திகதி ரூபா 376,623 தொகை செலவிடப்பட்டு முன்னைய காலத்தையும் உள்ளடக்கிய வருடாந்த சேவை உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

## 4.3 தொழிற்படு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்தில் பயிலுனர்களுக்காக விற்பனை செய்வதற்காக வழங்கியிருந்த ரூபா 19,920 பெறுமதியான 498 பயிற்சி புத்தகங்களின் பற்றாக்குறையொன்று தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 ஆண்டின் போது மாத்தறை பகுதியில் ரூபா 35,125,261 தொகை ஒன்று செலவிடப்பட்டு தொழில் தேர்ச்சி அபிசேக நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடாத்தி அங்கு பயனற்ற செலவுகள் மேற்கொள்ளல் தொடர்பாக தீர்க்கப்படாத சிக்கல்கள் காணப்பட்ட போதும் மீளாய்வாண்டின் போது ரூபா 4,574,794 தொகை செலவிடப்பட்டு காலிப் பகுதியிலும் அவ்வாறான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடாத்தப்பட்டிருந்ததுடன் அந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) முன் கற்றல் பின்னர் மதிப்பீடு செய்தல் (RPL) நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பயிலுனரின் திறமையை பயிற்சி அடிப்படையில் மதிப்பீடு செய்து தேசிய தொழில் தகைமைகள் மட்டத்திலான சான்றிதழ்கள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் காலியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் போது பங்குபற்றும் கலைஞர்களுக்கு வினியோகிப்பதற்காக முறையான அங்கீகாரம் இன்றி ரூபா 1,255,950 தொகை பெறுமதியான 550 உபகரணத் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக விழா பண்டங்கள், உணவு வகை பானங்கள் வழங்குதல் மற்றும் விழா ஏற்பாடுகள் மற்றும் கட்டிடக்கலை நிபுணர்களுக்கு தேவையான மூலப் பொருட்கள் வழங்குதல் என்பன ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத விடயங்களாக காணப்பட்ட போதிலும் இவ் விடயங்களுக்காக ஒரே ஒப்பந்தம் ஒன்றினை வழங்குவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. குறைந்த விலை கூறல் விலையை விட கூடுதலாக ரூபா 335,163 தொகை மிகையாக ரூபா 2,587,110 இற்காக விலைக்கு நிர்மாண வேலை மற்றும் கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றிற்கு இந்த ஒப்பந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(iii) இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் 250 கட்டிடக்கலை நிபுணர்களுக்கு மதிப்பளிக்கத் திட்டமிட்டு ரூபா 923,660 பெறுமதியான பண்டங்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும் வருகை தந்திருக்காத 72 வல்லுநர்களுக்கு மீதியாக இருக்க வேண்டிய பண்டங்களின் பெறுமதி மொத்த பண்டங்களின் பெறுமதியின் சதவிகிதமாக ரூபா 182,180 தொகையான பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

(iv) நிகழ்ச்சித் திட்டங்கள் முடிவடைந்த பின்னர் மேலதிகமாக வழங்கல்கள் சேவைகள் செய்யப்படாத ஒப்பந்தக்காரர்களின் வேண்டுகோளின் பிரகாரம் முறையான விதத்தில் பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் இன்றி உப தலைவரின் அங்கீகாரத்தின் மீது ரூபா 496,250 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. மேலதிக் கூடாரங்கள், சிப்கற்கள், பால் பக்கற்கள் வழங்குவதற்காக அந்த மேலதிகச் செலவு இணங்கிய சமமான செலவுகள்

மற்றும் சந்தை விலைகளுடன் ஒப்பிடும் போது மிக கூடிய விலையாகும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

கட்டுபெத்த கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவகத்தின் காட்சியறையை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்த வேலை பகிரங்க விலை கூறல் அழைத்தல் மேற்கொள்ளப்படாமல் வானவில் பக்கத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் ஒருவருக்கு ரூபா 19,774,540 தொகைக்கு 2014 அக்தோபர் 15 திகதி வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2015 மே மாதத்தில் காட்சி அறையின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டு இறுதி வரை நிர்மாண வேலையை பூர்த்தி செய்து அதிகார சபைக்கு ஒப்படைத்திருக்கவில்லை.

### 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாதிகள் உதவியாளர் பாடநெறி ஆரம்பிப்பதற்காக 2011 மற்றும் 2012 ஆண்டுகளின் போது 10 பயிற்சி நிலையங்களுக்கு வழங்கியிருந்த ரூபா 2,398,571 பெறுமதியான பண்டங்கள் அப் பாடநெறி ஆரம்பிக்கப்படாமையால் குறிப்பிட்ட நிலையங்களில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) 2012 ஆண்டின் போது பிரதேச செயலாளர் ஒருவரினால் கல்முனை மாவட்ட அலுவலகத்திற்கு வழங்கியிருந்த ஒரு ஏக்கர் காணி 2016 செப்டம்பர் 30 திகதி வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது.

(இ) 2014 ஆண்டின் போது குருநாகலில் நடைபெற்ற தொழில் தேர்ச்சி அபிசேக நிகழ்ச்சித்திட்டத்திற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 1,464,848 இற்கான பயிற்சி உபகரணங்கள் காணப்பட்ட போதிலும், அந்த உபகரணங்கள் பயன்படுத்தாமல் மாத்தறையில் நடைபெற்ற அவ்வாறான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றிற்காக உபகரண இருப்பொன்று கொள்வனவு செய்திருந்ததுடன் அவற்றை பயன்படுத்தாமல் ஒருகொடவத்த களஞ்சியத்தில் செயற்படாது காணப்பட்டது.

### 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐஎஸ்ஓ (ISO) தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக பலவித வர்ணங்களில் ஆன பிளாஸ்டிக் கோவை அட்டைகள் 8,655 கொள்வனவு செய்வதற்காக தேவையான பண்டங்களில் மாதிரிகள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் ஏற்கனவே தீர்மானிக்கப்படாமல் குறைந்த விலை சமர்ப்பித்திருந்த வழங்குனர்களின் பண்டங்கள் தேவையான மாதிரிகளுக்கு இணங்கவில்லை என அறிவித்து குறைந்த விலையை விட ரூபா 771,131 தொகை மிகையான விலை சமர்ப்பித்திருந்த வழங்குனர் ஒருவரை தெரிவு செய்து ரூபா 3,793,434 இற்கான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

2016 அக்தோபர் மாதம் அளவில் இந்த கோவை அட்டைகளில் ரூபா 2,955,644 பெறுமதியான 5781 கோவை அட்டைகள் தேவைக்கு ஒவ்வாமை மற்றும் வேறு காரணங்களின் அடிப்படையில் பயன்படுத்தியிருக்கவில்லை. அத்துடன் பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்தியும் இருக்கவில்லை.

## 4.7 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த அதிகார சபையின் வளங்கள்

அதிகாரசபையின் இரண்டு ஊழியர்கள் வரிசை அமைச்சுக்கும் மேலும் 07 ஊழியர்கள் அமைச்சு பதவியணிக்கும் 03 மாத காலப் பகுதிக்காவும், ஒருவர் 2015 திசெம்பர் 09 திகதி முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2016 அக்தோபர் 25 வரையும் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

## 4.8 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1358 மற்றும் உள்ளவாறான பதவியணி 869 ஆகக் காணப்பட்டமையால் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 489 ஆகக் காணப்பட்டதுடன் அந்த பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வெற்றிட பதவிகளில் விரிவுரையாளர்கள், பயிற்சி வழங்கும் அலுவலர்கள், மதியுரையாளர் மற்றும் பரிசோதகர் ஆகிய அங்கீகரிக்கப்பட்ட 784 கல்வி பதவிகளில் 353 பதவிகள் அதாவது 45 சதவீதம் வெற்றிடமாக காணப்படல் நிறுவனத்தின் பயிற்சி வழங்கல் மற்றும் பரிசோதனை நடவடிக்கைகள் மீது பாதகமாக தாக்கம் ஒன்றினை ஏற்படுத்துவதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2011 ஆண்டு முதல் அதிகாரச சபையின் நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு பகுதியின் மற்றும் 2009 ஆண்டு முதல் வாகனங்களின் பராமரிப்பு விடயங்களுக்காக கடமைகள் சாட்டுதல் செய்தல் அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஒக்தோபர் 25 ஆந் திகதி வரையும் சேவையில் ஈடுபடுத்தியிருந்த போதிலும் அவ் விடயங்களுக்காக அதிகாரசபைக்கு நேரடியாக பொறுப்பு கூறக் கூடிய நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடுபெத்த பயிலுனர் பயிற்சி நிறுவக்தைச் சேர்ந்த இலக்கம் 5/பீ1/01 கொண்ட உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வெளிச்சாராருக்கு வாடகை அடிப்படையில் வழங்குவதன் மூலம் அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்வதற்கு இடமளித்தல் என்ற குற்றச்சாட்டு மீது வேலை இடைநிறுத்தப்பட்ட கணக்காளர் ஒருவர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கை காணாமல் போயிருந்ததுடன், 2015 ஜனவரி 19 திகதி முதல் அவ் உத்தியோகத்தர் மீண்டும் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்தார். மீண்டும் புதிதான ஆரம்ப விசாணைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் போது அவ் உத்தியோகத்தருக்கு கொழும்பு பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் பட்டப்பின்படிப்பு பட்டதாரி பாடநெறி ஒன்றினை கற்பதற்காக ரூபா 122,500 தொகை ஒன்று அதிகாரசபையினால் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) உரிய முறையில் முன் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் விடுமுறைகள் அங்கீகரிக்கப்படாமையால் மாவட்டத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரின் 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகளுக்காக சம்பளமற்ற விடுமுறை தினங்கள் முறையே 173 உம் 191.5 உம் மற்றும் 05 என 369.5 நாட்கள் ஆகியிருந்ததுடன் அற்காக செலுத்தப்பட்டிருந்த சம்பளத்தை கணித்து 2016 ஒக்தோபர் வரை அறவீடு செய்திருக்கவில்லை.

## 4.9 வாகனப் பயன்பாடு

அதிகாரசபையின் வாகனப் பராமரிப்பு மற்றும் நிருவாகம் தொடர்பாக முறையான நடைமுறையொன்று காணப்படவில்லை. அத்துடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆண்டின் போது ஜேர்மனி சர்வதேச உதவி (ஜீஜஇஸட்) அமைப்பில் இருந்து கிடைத்திருந்த ஓட்ட நிலையில் காணப்பட்ட வாகனத்தின் என்ஜின் வேறு ஒரு வாகனத்திற்கு பொருத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 185,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் 35 நாட்களுக்கு பின்னர் அந்த வாகனத்தின் ஒரு பகுதி (கிலச்) செயற்படாமையால் அதனை பாவனையில் இருந்து அகற்றப்பட்டு 2016 ஆண்டின் போது கைதவிர்க்கப்பட்டு இருந்தமையால் செலவிடப்பட்ட ரூபா 185,000 பயனற்ற செலவொன்றாகும்.

(ஆ) 2007 ஆண்டு முதல் ஓட்டப்பட்டிருக்காத வாகனம் ஒன்று 2012 செப்தம்பர் மாதத்தின் போது ரூபா 194,950 தொகை செலுத்தப்பட்டு சாயம் பூசுதல் உட்பட திருத்த வேலைகள் மற்றும் பின்னர் இடையிடையே ரூபா 145,976 வரையான திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் ஓட்ட அட்டவணைகளின் பிரகாரம் திருத்த வேலைகளின் பின்னர் 102 கிலோமீற்றர் மாத்திரம் ஓட்டப்பட்டு இந்த வாகனம் கைதவிர்க்கப்பட்டிருந்தது.

(இ) 2007 முதல் 2014 ஆம் ஆண்டு வரை என்ஜின் திருத்த வேலைக்காக அனுப்பப்பட்டிருந்த வாகனம் ஒன்று 2014 ஆண்டின் போது ரூபா 1,683,500 செலுத்தப்பட்டு திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2011 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைக்கான மதிப்பீடு ரூபா 918,428 ஆகக் காணப்பட்டது. 2014 ஆண்டின் போது திருத்த வேலைக்காக ரூபா 765,072 தொகை மிகையாக செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது.

அதிகாரசபைக்குச் சொந்தமான ஒருகொடவத்ததையில் அமைந்துள்ள மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிலையத்தின் உதவியினை வாகன திருத்த வேலைகளுக்காக பெற்றுக்கொள்ள முடியுமாக இருக்கும் போது மற்றும் சாட்டுதல்கள் அடிப்படையில் வாகனப் பராமரிப்பு விடயங்களுக்காக உத்தியோகத்தர் ஒருவர் 2009 ஆண்டு முதல் சேவையில் ஈடுபடுத்தியிருக்கும் போது இந்த குறைபாடுகள் நேர்ந்துள்ளது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கை திட்டத்துடன் இணங்கக் கூடிய விதமாக செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைக் திட்டத்தில் நிதிசார் முன்னேற்றம் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

2009 ஜுன் 09 திகதிய டீஎம்ஏ/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 133 இல் குறிப்பிட்டுள்ளவாறு உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று அமைக்கப்பட்டு 08 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திட்டத்திற்கு இணங்க கணக்காய்வுகள் நடாத்துதல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் சுட்டிக் காட்டியுள்ள விடயங்களை சரிசெய்தல் தொடர்பாக முகாமை கவனம் செலுத்தப்படாமையால் அவ் அலகினை நடாத்துவதில் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்படவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 10 சதவீதம் முதல் 369 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.4 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆண்டின் போது உலக இளைஞர் மாநாட்டிற்காக அமைச்சு சார்பாக அதிகார சபையினால் செலவிடப்பட்ட ரூபா 2,000,000 தொகை பெறவேண்டிய மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒழுக்காற்று விசாரணையின் பின்னர் சேவையில் இருந்து நீக்கப்பட்ட அல்லது சேவை முடிவுறுத்திய ஊழியர் ஒருவர் அரச சேவையில் நியமனம் ஒன்று பெறுவதற்கு தகைமையற்றவராவதுடன் பண மோசடி ஒன்று தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு 2013 மே 08 திகதி வேலை இடைநிறுத்தப்பட்ட வேறு ஒரு நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஒருவர் அதிகாரசபையின் பணிப்பாளர் (நிதி) பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார்.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | களஞ்சியக் கட்டுப்பாடு | (i) | அனைத்து களஞ்சிய பண்டங்களின் கொள்வனவுகள் ஏடுகளுக்கு உட்படுத்தப்படாமை. |
| | | (ii) | தொழில்தேர்ச்சி அபிசேக நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட களஞ்சியப் பண்டங்களில் கொள்வனவு தொடர்பாக களஞ்சியக் காப்பாளர்களின் மூலம் உறுதிப்படுத்தப்படாமை. |
| (ஆ) | வாகனப் பாவனை | (i) | தேவையான சந்தர்ப்பங்களில் வாகனங்களைப் பழுதுபார்த்தலுக்கு உட்படுத்தாமையால் வாகனங்கள் சிதைவுற்ற நிலையினை அடைதல். |
| | | (ii) | தமைமையுடைய உத்தியோகத்தர்களின் பரிசோதனை மற்றும் மதிப்பீடு ஒன்று இல்லாமல் வாகனங்கள் பழுதுபார்த்தல்களுக்கு ஈடுபடுத்துவதன் காரணமாக பயனற்ற செலவுகளை மேற்கொள்வதற்கு நேரிடுகின்றமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பதவியணியினர் நிருவாகம் | (i) | கல்வி பதவியணியினர் போதியளவில் இணைத்துக்கொள்ளப்படாமையால் பயிற்சி வழங்குவதில் தடைகள் ஏற்படுகின்றமை. |
| | | (ii) | இரகசிய தன்மை மற்றும் பாதுகாப்பு வழங்கும் வகையில் தனிப்பட்ட கோவைகள் பேணப்படல், ஒழுக்காற்று நடவடிக்கை நடத்துதல் மற்றும் அதனது தீர்மானங்கள் செயற்படுத்தாமை. |
| (ஈ) | நிதி முகாமைத்துவம் | | முறைமையான அங்கீகாரம் ஒன்று இன்றி நிதியங்கள் நடாத்துவதற்கு இடமளித்ததன் காரணமாக பணம் விளைவற்றுக் காணப்படுகின்றமை. |
| (உ) | ஏடுகள் மற்றும் பதிவேடுகளை பேணல் | | கட்டுபெத்த பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் மின்சார தொழில்நுட்ப பிரிவில் 800 பண்டங்கள் பொருட் பதிவேடுகளில் உட்படுத்தப்படாமை. |